[1979 நவம்பர் 10

[பிற்பகல் 1-00]

மாண்புமிகு திரு பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்ட சேப்பாக்கம் விடுதி திறப்பதற்கு 30—10—1979 அன்று ஆணையிடப்பட்டு நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கிறது.

(14) மாயவரத்தில் டீசல் தட்டுப்பாடு குறித்து

திரு. இரெ. இராசமாணிக்கம் : தலைவரவர்களே,

''மாயூரம் வட்டத்தில் டீசல் தட்டுப்பாட்டால் டிராக்டர், லாரி இயங்காததால் விவசாயிகள் மத்தியில் நிலவும் பதட்ட நிலை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, அவை முன் அறிக்கை வைக்கப் பட்டிருக்கிறது.

அறிக்கை.

தற்போது தஞ்சாவூர் மாவட்டத்திற்கு சராசரியாக 2700 கிலோ லிட்டர் டீசல் எண்ணெய் மாதந்தோறும் வழங்கப் படுகிறது. இவ்வருடம் அக்டோபர் மாதத்தில் 2780 கிலோ லிட்டர் டீசல் எண்ணெய் வழங்கப்பட்டுள்ளது. குறுவை நெல் அறுவடை காரணமாக தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகத்தினால் மாவட்டத்தின் உள்ளேயும் தனியார் நிறுவனங் களால் மாவட்டத்தின் வெளியேயும் போக்குவரத்து நடமாட்டம் அதிகமானதின் காரணமாக டீசலுக்கான தேவை பெருகியது. இது சம்பந்தமாக 1979 ஆம் ஆண்டு அக்டோபருக்கான அதிக தேவை 10 சதவீதம் என எதிர்பார்க்கப்பட்டது. எனவே தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியாளர் அம்மாதத்திற்கு கூடுதலாக 300 கிலோ லிட்டர் டீசல் ஒதுக்கீடு செய்யுமாறு போக்கு வரத்து ஆணையாளர் தஞ்சாவூர் மாவட்டத்திற்கு கூடுதலாக 300 கிலோ லிட்டர் ஒதுக்கீடு வழங்கப்பட தேவையான நடவடிக்கை மேற்கொள்ளுமாறு மாநில ஒழுங்கிணைப்பாளர் மற்றும் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் வட்டார அலுவலரைக் (விற்பனை) கேட்டுக் கொண்டார்.

2. தற்சமயம் விற்பனையாளர்களால் 10 சத விகிதம் டீசல் கூடுதல் ஒதுக்கீடு பெறப்பட்டு வருகிறது என்றும் அதன் காரணமாக அளிப்பு நிலை சாதாரண நிலைக்கு வந்துவிடு

1979 நவம்பர் 10] [திரு. சி. பொன்னையன்]

மென்றும் தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியாளர் தெரிவித்துள்ளார், தற்போது மாயூரத்தில் விற்பனையாளர்களுக்கு டீசல் தட்டுப் பாடு இல்லை. ஏற்கனவே உள்ள டிராக்டர்களுக்கு தாலூகா பொருள் வழங்கு அதிகாரியினால் வழங்கப்பட்டு வருகின்றது. தற்சமயம் மாவட்டத்தில் எல்லா இருப்பு நிலையங்களிலும் (Bunks) போதுமான டீசல் கையிருப்பு உள்ளது.

திரு. இரெ. இராசமாணிக்கம் : தலைவரவர்களே, மாயூரத் திலே கடந்த ஒரு மாத காலமாக டீசல் கிடைக்கவில்லை. அந்தப் பகுதியில் ஒரு பெரிய போராட்டமே நடந்து கொண்டிருக்கிறது. குறுவை அறுவடை நடைபெறுகின்ற இந்த நேரத்திலே டீசல் கிடைக்காத காரணத்தாலே டிராக்டர் வைத்து உழவு செய்ய முடியாமல் விவசாயிகள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் கொடுத்திருப் பதன மூலக் கருத்தும் இதுதான்.

திரு. இரெ. இராசமாணிக்கம் : தலைவரவர்களே, ஒரு டிராக்டருக்கு ஒரு நாளைக்கு 30 லிட்டர்தான் கிடைக்கிறது. ஒரு டிராக்டருக்கு ஒரு நாளைக்குத் தேவையான அளவு டீசல் வழங்க அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே, 30 லிட்டர் டீசல் போதாது என்பதை அரசும் அறிகிறது. கையில் இருப்பதை கொடுக்க வேண்டிய ஏற்பாடு செய்யப் படுகிறது. தற்போது கூடுதலாக 10 சத விகிதம் அதிகமாக கொடுக்கப்படுகிறது. இன்னும் சற்று அதிகமாகக் கொடுக்க வாய்ப்பு இருக்கிறது.

(15) சோழன் போக்குவரத்துக்கழக ஊழியர்கள் உண்ணாவிரதம் குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் இரெ. இராசமாணிக்கம், மா. மணிமாறன் ஆகியோர் மாண்புமிகு போக்குவரத்து அமைச்சரின் கவனத்திற்கு கொண்டுவருவார்கள்.